## தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 05.09.2019 ((முற்பகல்)**

**முன்னிலை**
**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**
**•••••••••**

**வழக்கு எண்.SA 9200/E/2018**

திரு சொ.குமார் ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
தாம்பரம்,
சென்னை - 45. ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 24.09.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 29.10.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 04.12.2018 |

******

**ஆணை**

இன்று (05.09.2019) முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு சொ.குமார் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, திரு ஜெ.சசிகுமார், முதுநிலை வருவாய் ஆய்வாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தாம்பரம், சென்னை ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் ஒரே தகவலைக் கோரி வெவ்வேறு மனுக்களை நான்கு வெவ்வேறு பொதுத் தகவல் அலுவலர்களுக்குத் தாக்கல் செய்து, ஆணையத்திற்கும் நான்கு வெவ்வேறு இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளதன் அடிப்படையில் நான்கு வழக்குகளும் ஒன்றாக விசாரிக்கப்பட்டன.

3. மேல்முறையீட்டாளர் 24.09.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் 2015-ஆம் ஆண்டு பருவமழை வெள்ளத் தடுப்பு நடவடிக்கை என்கின்ற பெயரில் அரசு நிதியினை முறைகேடு செய்து வெள்ள நிவாரண நிதியை மோசடி செய்து பேரிடர் மேலாண்மை மக்கள் பணிகளை நடைமுறைப்படுத்தாத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி 02.11.2017 அன்று வருவாய் கோட்ட அலுவலர், சென்னை அவர்களுக்கு மனு அளித்ததாகத் தெரிவித்து, அம்மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக 9 இனங்களில் தகவல் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வருவாய் கோட்ட அலுவலர் அலுவலகம், தாம்பரம், சென்னை என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

4. மேல்முறையீட்டாளருக்கு 25.09.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய இனம் 2 முதல் 9 வரையிலான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைச் சட்டப்பிரிவு 7(6)-ன்படி செலவுத் தொகையின்றி வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 29.10.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், வருவாய் கோட்ட அலுவலர் அலுவலகம், தாம்பரம், சென்னை அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னரும் பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் முழுமையாக வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க உத்திரவிடுமாறும், தகவல் வழங்காத பொது அதிகார அமைப்பினர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும், தனக்கு இழப்பீடு அளிக்க ஆணையிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 04.12.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (05.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

5. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

6. இவ்வழக்கைப் பொறுத்தவரையில், இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான முதுநிலை வருவாய் ஆய்வாளர், மேல்முறையீட்டாளருக்கு 25.09.2018 15.12.2018 மற்றும் 30.08.2019 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாகத் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது. இருப்பினும் மேல்முறையீட்டாளருக்கு முழுமையான, திருப்திகரமான தகவல் வழங்கப்படவேண்டுமென்று ஆணையம் கருதி, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

> **பொதுத் தகவல் அலுவலர், வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சேப்பாக்கம், சென்னை அவர்களும், பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களும் இணைந்து, மேல்முறையீட்டாளர் 24.09.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ள வெள்ள நிவாரணம் குறித்து சமர்ப்பித்த ஆவணங்கள் மீது பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விபரத்தை அவ்வலுவலகத்திலிருந்து பெற்று, இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலர், வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,**

**சேப்பாக்கம், சென்னை மற்றும் பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் ஆகியோருக்கு உத்திரவிடப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.SA 9200/E/2018**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
தாம்பரம்,
சென்னை - 45.

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்,
வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர்
மேலாண்மைத் துறை,
எழிலகம்,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005.

**மனுதாரர்**

திரு சொ.குமார்,
த/பெ. சொக்கலிங்கம் (லேட்),
எண்.5, வேம்புலி பண்ணைக்காரன் தெரு,
உள்ளகரம்,
சென்னை - 600 091.

Copy to: Judgement File.
09/09/19